நகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கடன் கோரி, நகர வளர்ச்சித் துறைக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டு, நடவடிக்கைகள் நிலுவையில் உள்ளன.

திரு. கே. அர்ஜுனன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேலை துவக்கப்பட்டு சுமாராக எவ்வளவு காலத்திற்குள் முடிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்து வந்திருக்கிறது. இடம் போதுமா, போதாதா என்ற பிரச்சினை வேறு. அந்த வேலைக்காக 20 லட்சம் ரூபாய் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அதற்குப் பிறகு 13 கடைகளும், 45 தினசரி மார்க்கெட்டுக்குரிய கடைகளும் கட்டுவதற்கான திட்டம் அதிலே புகுத்தப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு 10 லட்சம் ரூபாய் கடன் கொடுத்தால் கூட, ஆண்டுக்கு 1.50 லட்சம் ரூபாய் வருமானம் வரவேண்டும். அது வருமா என்பதற்காக விளக்கம் கேட்டு திருப்பி விடப்பட்டது. அதற்குப் பிறகு பேரூராட்சி மன்றத்தலைவர் பேரூராட்சி மன்றத்தின் வருவாயை உத்தேசித்தும், மக்களின் நலனைக் கருதியும் அந்தக் கடைகளையும், அந்த தினசரி மார்க்கெட்டுக்குரிய கடைகளையும் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதையும் அதற்கான வருவாய் கிடைக்கும் என்பதையும் தெரிவித்ததன் பேரில் இப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. துரிதமான நடவடிக்கை எடுக்கப்படும்.

9.20 மணி

பரனூர் தொழு நோயாளிகள் விடுதி.

*3085—டாக்டர் து. திருமூர்த்தி :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரனூர் தொழு நோயாளிகள் விடுதியிலிருந்து நோயாளிகளைத் தகாத முறையில் வெளியேற்ற நிர்வாக அதிகாரி முற்படுவது அரசுக்கு தெரியுமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்திலிருந்து எந்த ஒரு இல்லவாசியையும் தகாத முறையில் வெளியேற்ற அரசு அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.